# தமிழ் நிலம்

## உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] திபி. 2017 ஆடவை 11 (27-7-1986) 65 காசுகள் [இதழ் எண்: 73] [ . . ]


# திம்புவில் பேச்சு தொடங்கி ஓராண்டு ஆகியும் இன்னும் தீர்வு இல்லையே!

## இலங்கை அரசு வலுப்பெறவே சூழ்ச்சி நடைபெறுகிறது!

## இந்திய அரசால் தமிழினம் எப்பொழுதுமே நன்மை பெற முடியாது!

## தமிழீழம் இல்லையேல் தமிழ்நாடு என்று தமிழர்கள் கோரிக்கை எழுப்ப வேண்டும்!

### பாவலரேறு அறிக்கை!

தமிழீழத் தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சு தொடங்கி சரியாக ஓராண்டு ஆகிறது. கடந்த 8-7-85-இல் திம்புவில் போராளிகளும் இலங்கையில் உள்ள ஆட்சிக் குழுவினரும் முதல் கட்டப் [illegible]பச்சைத் தொடங்கினர். அப்பேச்சு இரண்டு, [illegible]ன்று கட்டங்களாக அமைந்தும் பய னொன்று[illegible] ஏற்படவில்லை.

இப்பேச்சுகளில் இந்தியா ஏதோ அமைதியாகத் தலையிட்டு, ஒப்புரவு முயற்சி செய்வதாக உலகம் நம்பிக் கொண்டிருக்கிறது. இப்படி நம்ப வைக்க வேண்டும் என்பதுதான் இந்தியாவின் கருத்து; இலங்கையின் கருத்தும் அதுவே.

ஆனால் நடப்பதோ வேறு. அமைதிப் பேச்சு என்னும் பெயரில், இலங்கை அரசு, நேரடியாகவும் மறைமுகமாகவும் இசுரேல், இங்கிலாந்து, பாக்கிசுதான், அமெரிக்கா போன்ற நாடுகளுடன் தொடர்பு கொண்டு பொருளுதவி பெறுவதும், படைக் கருவிகளை வாங்கிக் குவிப்பதுமான செயல்களைத் தீவிரமாகச் செய்து வருகிறது. இவ்வடிப்படையில் இலங்கையில் உள்ள தமிழர்கள் நாள்தோறும் கொன்று குவிக்கப்பட்டு வருகிறார்கள், திம்புப் பேச்சுக்குப் பின்னர் ஏறத்தாழ 4000 தமிழ் மக்கள் கட்டுக் கொல்லப்பட்டும், கொலை செய்யப்பட்டும் 1000க்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டும் வந்திருக்கிறார்கள். போராளிகளிலும் நூற்றுக் கணக்கான பேர் அழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தில்லி அரசைப் பொறுத்த வரையில் என்றுமே அது தமிழர்களுக்குச் சார்பா நடந்துகொண்டதுமில்லை; நடந்துகொள்வதுமில்லை. இது வரலாறு. ஏதோ தன் கடமையைச் செய்வது போல் நாடகம் ஆடிக் கொண்டிருக்குமே தவிர, உண்மையாக அது தமிழர்களுக்குச் சார்பாக என்றுமே கருத்துத் தெரிவித்ததில்லை. அதுஈழத் தமிழர் சார்பாக நடுநிலைப் பேச்சில் ஈடுபடுவதுபோல், மறைமுகமாக இலங்கை அரசுக்கே துணை போய்க் கொண்டுள்ளது.

ஈழத்தமிழர் அழிவைப் பற்றி இந்தியா இது வரை இலங்கை அரசுக்கோ, செயவர்த்தனாவிற்கோ நேரிடையாக ஒரு கண்டனம் தெரிவித்ததுகூட இல்லை. ஏதோ தெருவில் போகிற ஒரு வழிப் போக்கர், இரண்டு தரப்பார்க்கும் ஏற்பட்ட ஒரு தெருச் சண்டையில் தலையிடுவதைப் போல், அமைவு செய்வதாகப் பேசிக் கொண்டுள்ளதே தவிர, வேறு தீவிரமான, உண்மையான, தீர்வு முயற்சியில் ஈடுபடவில்லை,

தமிழீழச் சிக்கலில் உண்மையான தீர்வு தமிழீழம்மே! இதை எந்த வகையாலும் வேறு முயற்சியில் திசைதிருப்பி விட்டு விடமுடியாது. ஆனால், இந்தியா தமிழீழம் அமைவதை உள்ளத்தாலும் விரும்பவில்லை; செயலாலும் அவ்வாறு ஈடுபட முயலவில்லை. இஃது உலகமறிந்த ஒன்று. இன்னும் சொன்னால் தமிழீழ முயற்சி என்பது, தமிழீழத் தமிழர்க்கும் சிங்களவர்க்கும் ஏற்பட்ட இனச் சிக்கல். இதில் அமைதியான ஒப்புரவு முயற்சிக்கே இடமில்லை. இதுவரை தமிழீழப் போராளிகள் தமிழீழக் கோரிக்கைக்குச் சிறிதும் குறைவான ஒரு வேண்டுகோளை முன்வைத்ததில்லை. இதுவும் உலக மக்களுக்குத் தெளிவாக்கப் பெற்றிருக்கிறது.

இந்த நிலையில் இந்தியா பேச்சு நடத்துவது என்பது ஒரு போலியான ஒப்புரவு முயற்சியே. இதற்கு ஏற்ற ஒருவராகத் தமிழீழக் கூட்டணியின் தலைவராக திரு. அமிர்தலிங்கத்தைப் பிடித்து, இவ்வினை பேச்சு முயற்சியில் இந்தியா ஈடுபடுத்திக் கொண்டிருப்பது, ஈழத்தமிழர் சிக்கலை ஒரு போதும் தீர்வு செய்து விட உதவிட முடியாது.

திரு. அமிர்தலிங்கமும் அவரது கூட்டணியினரும், இறுதியாக நடத்திய கொழும்புப் பேச்சு என்பது வெறும் ஓர் அரசியல் நாடகமே. அவர்கள் அப் பேச்சின் ஒரு பகுதியை முடித்துக் கொண்டு தமிழகம் திரும்பிய பின், திரு. அமிர்தலிங்கம் செய்தியாளரிடம் தெரிவித்த செய்தியை உன்னிப்பாக ஆராய்ந்தால், இப் பேச்சால் எவ்வகை நன்மையும் ஏற்படப் போவதில்லை என்றே உணரவேண்டி இருக்கிறது. அவருடைய உரையிலிருந்து, தமிழீழத்திற்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்று நம்புவதற்கு எதுவுமில்லை.

"இலங்கைத் தமிழர் சிக்கலை ஒரு கட்டிட அமைப்புக்கு ஒப்பிட்டால், அக் கட்டிடத்திற்கான அடிவாரமோ, திட்டமோ, கொழும்புப் பேச்சில் முடிவாகவில்லை" என்பதைத் தெளிவாகவே கூறியிருக்கிறார் அவர். அஃதாவது இது வெறும் வீண் பேச்சு என்று மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறிய செய்திகள், கூட்டணியின் பேச்சு முயற்சி எதுவுமே பயனளிக்காது என்று தெரிவிப்பதுடன், சிக்கலைத் திசை திருப்புவனவாகவே உள்ளன.

தொடக்கத்தில், வடக்கு - கிழக்கு மாநிலங்கள் இணைக்கப்பட வேண்டும் என்று கூறிவந்த இவர், இதை இணைப்பு என்று கூட்டணி கருதவில்லை. ஒரே மாநிலம் என்பதுதான் எங்கள் கருத்து; என்பதாகப் பிதற்றியிருக்கிறார். இவராகக் கருதிக் கொள்ளும் இக் கருத்தே செயலாகிவிட முடியுமா என்பதைக் கூட இவர் எண்ணிப் பார்க்கவில்லை என்று தெரிகிறது.

'தமிழர் பகுதியில் சிங்களர் குடியேற்றம் தொடர்பான சிக்கலும் தீர்க்கப்படவில்லை' என்று இவர் கூறியிருப்பது இதுவரை இவர்கள் வெறும் உமியையே உரலிலிட்டு இடித்திருக்கிறார்கள் என்பதையே புலப்படுத்துகிறது.

தமிழீழக் கோரிக்கை என்னும் முடிவுக்கு நாம் வரவேண்டிய காரணங்களிலேயே இவரும் இவரது அரசியல் கூட்டணியும் இன்னும் தெளிவாக்கிக் கொள்ளவில்லை என்று இவரது பேச்சு உணர்த்துகிறது.

இவர் மேலும் வெளிப்படுத்திய செய்திகளில் எந்த வகையான ஒரு சாரமும் இல்லை. ஏதோ போனோம், வந்தோம் என்று சொல்வதற்குப் பகரமாக, அஃதாவது தம் தோல்வியை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாமல், திட்டமில்லை', முடிவு செய்யப்படவில்லை, இறுதித் திட்டம் அறிவிக்கப்படவில்லை, கவலையளிப்பதாகவே உள்ளது' என்றவாறு, விளக்கெண்ணெயில் விழுந்த வெண்டைக்காயைப் போல வழவழா கொழகொழா என்றே பேசியிருக்கிறார். இந்த ஏனோதானோ பேச்சுகளுக்காகக் கூட்டணி ஏன் இத்தனை நாள்களைக் கடத்தியிருக்க வேண்டும்?

இறுதியாக இவர் கூறிய ஒரு கருத்தைப் பாருங்கள், இலங்கை அரசியல் சட்டத்து[illegible]

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம் பார்க்க)

# பாவலரேறு அவர்களின் 2 ஆம் மலேசியச் சுற்றுச் செலவு!

## (நிகழ்ச்சிச் சுருக்கம்)

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் வெளிநாட்டுச் செலவு என்பது, தமிழகத்தில் உள்ள அரசியல் தலைவர்கள், குமுகாய இன நல இயக்க முனைப்பாளர்கள், பிற துறை அறிஞர்கள், கலைஞர்கள், இதழாசிரியர்கள், போன்ற யாவருடைய செலவினும் சிறப்பு வாய்ந்ததும், தனித்தன்மை மிக்கதும் ஆகும்.

பெரும்பாலும் தமிழகத்தினின்று இங்குள்ள பலரும் வெளிநாடு செல்வது பலவேறு குறிக் கோள்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். வாணிகம், அரசியல், பொழுதுபோக்கு, கலைத் தொடர்பு, சமயத் தொடர்பு, இலக்கிய ஆக்கம், கல்வி, இன நல நோக்கம், பொருள் வருவாய், கள்ளக் கடத்தல் முதலிய பல நோக்கங்களுக்காக இங்குள்ள பலரும் ஓரிரு முறையோ, அடிக்கடியோ, வெளிநாடு சென்று வருகின்றனர்,

முற்றிலும் பொதுநல நோக்கில் மொழி, இன, வரலாறு, பண்பாட்டு, உரிமை நல மீட்சிக்கெனத் தொண்டு நோக்கில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வெளிநாடுகள் போய் வருவார் மிகமிகக் குறைவானவர்களே. அவர்களுள்ளும், அரசியல் அதிகார வாய்ப்புகள் இல்லாமல், சாதி மதப் பின்னணியில் விழாமல், பொருள் ஏந்துகள், கட்சி வலிவுகள், கலைக் கழகங்கள் சார்பு இன்றித் தனிப்பட்ட நிலையில், தம் அறிவுச் சிறப்பாலும், தொண்டுழைப்பின் அடிப்படையிலும், தமிழ் மொழி, இன நல, நாட்டு நலச் சிந்தனை நோக்கிலும், வெளிநாட்டிலுள்ள தமிழ், இன, இலக்கிய, உரிமை நலம் நாடும் அன்பர்கள், மன்றங்கள், இயக்கங்கள், கழகங்களால் அழைக்கப் பெற்று-முழுப் பயனுக்காக அயலகச் செலவை மேற்கொள்வார் மிக மிக அரியராகவே உள்ளனர்.

அவர்களுள்ளும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் இத் தகுதி நிலைகளில் தனிச்சிறப்பு வாய்ந்தவராக விளங்கி வருவதை அவர்க்கு நேர் எதிர் அணியில் உள்ளவர்களும் நன்கு அறிவர்: ஒப்புக் கொள்வர்.

தமிழ்மொழி, இன, நாட்டு நலன்களுக்காகவும் அவற்றின் அடிமை நீக்கத்திற்காகவும், விடுதலை-உரிமை மீட்பு நோக்கத்திற்காகவுமே கடந்த முப்பத்தைந்து-முப்பத்தாறு ஆண்டுகளாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, தாம் கொண்ட கொள்கையிலும் நோக்கிலும் போக்கிலும் ஓர் இம்மியும் நெகிழாமல், இமைப் பொழுதும் சோராமல் உழைத்து வரும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் வெளிநாடு செல்கின்றார் எனில், அச்செலவிற்கு வேறு யாருக்கும் இல்லாத பெருமை உண்டு; பெருமிதமும் உண்டு; பயனும் உண்டு. அவருக்கென்று எந்த அரசியல் கட்சிச் சாய்காலும் இல்லை; சாதி மதப் பின்னணியும் இல்லை; பொருள் வலிவோ, கட்சிப் பணமோ இல்லை என்பது யாவருக்கும் தெரிந்த ஒன்று.

இந்த நிலையில்தான் பாவலரேறு அவர்கள் கடல்தாண்டி ஐந்தாம் முறையாகவும், மலேசியாவிற்கு 2-ஆம் முறையாகவும், கடந்த மே மாதம் 15-ஆம் பக்கல் தமிழகத் தலைநகரிலிருந்து தம் வெளிநாட்டுச் செலவை மேற்கொண்டார்கள்.

அவர்களைச் சென்னை வானூர்தி நிலையத்திலிருந்து கடந்த 15-5-86 வியாழன் 12 மணியளவில் சொல்லாய்வறிஞர் அருளி, திரவிட சமய ஆராய்ச்சிப் பேராசிரியர் பர். மு. தெய்வநாயகம், தென்மொழி நா.இளமாறன் குடும்பத்தினர், பேராசிரியை தாயம்மாள்-அறவாணன், தென்மொழி ஈகவரசன், மா. பூங்குன்றன், மா. பொழிலன், தென்மொழி அரசத் தொகையன், மணி, பாவலர் இளஞ்சித்திரன் ஆகுனறன் முதலானோர் வழியனுப்பி வைத்தனர். (மலேசியா புறப்பாட்டுச் செய்தி எவருக்கும் தெரிவிக்கப்படவில்லை.)

மாலை 6.30 மணியளவில், மலேசியன் வானூர்தி பினாங்கு பாயான் லெப்பாசு (Bayan Lepas) வானூர்தி நிலையத்தை அடைந்தது.

வானூர்தி நிலையத்தில், பாவலரேறு அவர்களைச் செலாமா, தமிழ் நெறிக் கழக அமைப்பாளரும், தலைவரும் ஆகிய பாவலர் **அ.பு. திருமாலன்**, செயலர் **பழ. வீரன்** துணைத் தலைவர் **ஒளியழகனார்** (செ. சண்முகம்), பொருளர் **சிற்றரசு** (ம.கணேசன்), துணைச்செயலர் **மு. பன்னீர்ச்செல்வம், அ. ச. முத்து** (முன்னாள் செயலர்), இளைஞர் பகுதித் தலைவர் **க. அறிவழகன்** (இராமசாமி), செயற்குழு உறுப்பினர்கள் பழ. அறிவுமணி, இரா. உலகநாதன், வேமெய்யழகன் (மயில் வாகனன்), இளைஞர் பகுதி உறுப்பினர் இரா. பாண்டியன், வட்டப் பேராளர் ஆ. கன்னையா, ப. நெஞ்சிற்கினியன் (மனோகரன்) அர முனிசாமி (திருச்செல்வம்), மு. தண்ணீர்மலை ஆகியோரும்;

மகளிர் பிரிவுத் தலைவி. பெ. கி. குழலி (வேணி) செயலர் தமிழ்மணி, உறுப்பினர்கள் மு. செல்வி (இலக்குமி), தே. தேனருவி, செல்வி அன்பரசி, செல்வி அன்புமலர், செல்வன். அரியநாயகன், பாலமுரளி, இளமுருகன் (பாலமுருகன்), உலகமுதல்வன் (உலகேசுவரன்) ஆகியோரும்;

நெகிரி மாநில நிகராண்மைக் குழுவினர்; தலைவர் **இரா. சாரங்கபாணி**, அமைச்செலவன (நரசிம்மன்), பொன்னுசாமி, இரா. கு. கணபதி, சி. பெருந்தவர, (மகாலிங்கம்), வ, கணேசன், சி, மாவலன், (சுப்பிரமணியன்), நிகராண்மைக் குழுத் துணைத் தலைவர், சிலாங்கூர் மாநில பொன். வேல்மறவன (வேலாயுதம்) (ஒலி, ஒளிப்படப் பதிவாளர்), பினாங்குத் தோழர்கள், பெ. குமரன் (முனியாண்டி), பெ. வெற்றியழகன் (செயராமன்), இராசேந்திரன், மு. இரமணி முதலிய தமிழ் நெறிக் கழகத்தைச் சார்ந்தவர்களும், பாவலர் திருவரசு, சோனை முத்து (பெரியார் வரலாற்று நூலாசிரியர்), பினாங்கு இந்தியன் பேராயத் துணை தலைவர், பினாங்குக்கிளை திராவிடர்கழகச் செயலர், பினாங்கு செந்தமிழ்க் கலா நிலையத்தைச் சேர்ந்த செந்தமிழ்ப் பாமணி வி. கே. சுப்பிரமணியம் ஆகியோரும் வரவேற்று மகிழ்ந்தனர்.

தலைவர் பாவலர் அ.பு. திருமாலனார், பாவலரேறு அவர்களுக்குச் சூட்டிய மாலையைப் பாவலரேறு அவர்கள் தடுத்து வாங்கிப் பாவலர் அவர்களுக்கே சூட்டி மகிழ்ந்தார்.

பின்னர் பாவலர் அவர்களும் பிற கழக முகாமையரும் பல்வேறு வண்டிகளில் பாவலரேறு அவர்களை அழைத்துக் கொண்டு, பினாங்கு நகரில் சியார்சுடவின் பகுதியிலுள்ள **தாவூது உணவு விடுதிக்குச்** சென்றனர்,

அங்குள்ள விருந்தினர் அரங்கில் பாவலரேறு அவர்களுக்கு வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்குத் த. நெ. கழகத் தலைவர் திரு. **அ. பு. திருமாலனார்** தலைமை தாங்கினார். பின்னர்,

பினாங்கு கிளைக்கழகப் பொறுப்பாளர் திரு. **பெ. குமரன்**, நெகிரி மாநிலத் தலைவர் திரு, **இரா. சாரங்கபாணி**, செலாங்கூர் மாநிலப் பொறுப்பாளர் சார்பில், கழகத் துணைத்தலைவர் திரு. **செ. ஒளியழகனார்**, பினாங்கு மக்மாண்டின் மலேசிய திராவிடர் கழகக் கிளையின் செயற்குழு உறுப்பினர் திரு. **ஐயாவு**, ஆகியோர் பாவலரேறு அவர்களுக்கு மாலைகள் அணிவித்தனர். பின்னர் செயலாளர் வரவேற்புரை, தலைவர் அறிமுகவுரை, பாராட்டுரை ஆகியவற்றுக்குப் பின்னர் பாவலரேறு அவர்களின் சிறப்புரை நிகழ்ந்தது.

அதன்பிறகு, இனிய வரவேற்பு விருந்து நடைபெற்றது, வானூர்தி நிலைய வரவேற்பில் கலந்து கொண்டவர்களுடன் மேலும் சிலர் பெருமகர்கள் விருந்தில் பங்கேற்றனர்,

விருந்துக்குப்பின், இரவு 10 மணியளவில் பாவலரேறு அவர்களை அழைத்துக் கொண்டு தலைவரும், பொறுப்பாளர்களும் செலாமா புறப்பட்டனர். இரவு 12-30 மணியளவில் செலாமா அரசினர் ஓய்வு விடுதியை அடைந்தனர்.

மறுநாள் 16-5-86 முழுவதும் பாவலரேறு அவர்கள் ஓய்வில் இருந்தார். காலையும்-மாலையும் மறுநாள் காலையும், கழக உறுப்பினர்கள் அறிமுகம், கலந்துரையாடல், கருத்து விளக்கம் கேட்டல் முதலிய நிகழ்வுகள் நடந்தன.

அதன்பின்னர், கடந்த 17-5-86 முதல் 18-6-86 மாலை முடிய, மலேசிய நாட்டின் வடமுனை தொடங்கித் தென்முனை வரை, பல்வேறு நகரங்கள், தொய்வத் தோட்ட, செம்பனைத் தோட்டப் பகுதிகள் ஆகியவற்றில், 33 நாள்களில், 34 உரை நிகழ்ச்சிகளும், 10 கலந்துரையாடல்களும் பாவலரேறு அவர்களால் நிகழ்த்தப்பெற்றன. (விளக்கப் பட்டியல் வேறொரு பக்கத்தில்). இவ் வகையில் அவர்கள் பயணம் செய்தது ஏறத்தாழ 5,000 கற்களாகும்.

பயணம் முழுவதும் தமிழ்நெறிக் கழகம் ஏற்பாடு செய்திருந்த பேருந்திலேயே (Van) நடந்தது. அதை முழுவதுமாக, மிகப் பாதுகாப்புடனும், கவனமுடனும், இரவு பகலாகவும், வெயிலிலும், மழையிலுமாக ஓட்டிச் சென்றவர், அன்புக்கும், பெருமைக்குமுரிய கழக உறுப்பினரும், கழகத் தலைவர் பாவலர் திரு. அ. பு. திருமாலன் அவர்களின் இளவலும் ஆகிய திரு தண்ணீர்மலை ஆவர்.

பாவலரேறு அவர்கள் இவ்விரண்டாம் மலேசியச் செலவில் நிகழ்த்திய உரைகள் மொத்தம் 76 மணி நேரமாகும். தமிழர் அல்லாமல் மலேசியர்களே வாழும் இரண்டு மூன்று மாநிலங்களைத் தவிர்த்து, மற்ற மாநிலங்கள் அனைத்திலும் உள்ள, தமிழர்கள் மிகுதியும் வாழ்ந்துவரும் நகரங்கள், ஊர்கள், தோட்டத் தொழிலாளர்கள் வாழும் பகுதிகள் பெரும்பாலானவற்றில் பாவலரேறு அவர்களின் உரைகள் நிறைவுற நிகழ்ந்தன.

உரைகள், நிகழ்ச்சி நாள்களில் பெரும்பாலும் மாலையிலும், சிலவிடங்களில் இரவு 10, 11 மணிவரையிலும் கூட நடந்தன. தங்கியிருக்கும் இடத்திலிருந்து 15 கற்கள் முதல் 50, 60 கற்கள் வரையிலும், சென்று உரை நிகழ்த்திவிட்டு, இரவு 12 மணிக்கு மேல் கூட சில நாள்களில் திரும்ப வேண்டியிருந்தது. சில நாள்களில் பிற்பகலில் ஒன்றும் முன்னிரவில் ஒன்றுமாக இரு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இது போன்ற நாள்களில் இருப்பிடம் திரும்பப் பின்னிரவு ஆகிவிடும் சிற்சில நாள்களில் இரவு முழுவதும் வண்டிச் செலவு இருக்கும். காலந் தவறிய உண்டி நிலை பலநாள்களில் இருந்தது.

இவை போலும் சிற்சில நெகிழ்ச்சி நிலைகள், ஓய்வில்லாத வினை அழுத்தங்கள் தவிர, பிற நிலைகள் யாவும் செப்பமுடனும் திட்பமுடனும், பலவேறு தொல்லைகள், சுமைகள் இவற்றுக் கிடையிலும் நிகழ்ச்சிகள் அமைக்கப் பெற்றிருந்தது, இச்செலவில் ஒரு சிறப்புக் கூறுகும்.

சென்ற முறை பாவலரேறு அவர்களின் '**சிங்கை-மலேசியச் செலவு**' 1974 இல் நடைபெற்றது. **அச்**செலவு மூன்று மாதங்கள் சிங்கப்பூர்-மலேசியா ஆகிய இரு நாடுகளிலும் அந் நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன. அவற்றை முன்னின்று ஏற்பாடு செய்தவர், நீண்ட நாளைய தென்மொழி அன்பரும், சிங்கப்பூரில் இருந்த '**மாதவி இலக்கிய மன்றத்தின்**' தலைவரும், **சிங்கை**-மலேசியப் பகுதிகளில் **தென்மொழி**'யும், '**தமிழ்ச்சிட்டு**'ம் பரவுவதற்கு நெடிய அருந் தொண்டாற்றியவரும், பாவலரேற்றின் தலைமுதல் மாணவர்களுக்குள்ளும், செயல் தொண்டர்களுக்குள்ளும் சிறப்புற்ற ஒருவரும், பாவலரேறு அவர்களின் குடும்பக் காப்பாளர்களுள் ஒருவரும் ஆகிய பாவலர் திரு. **முல்லைவாணன்** அவர்கள் ஆவார். அக்கால் மூன்று மாத எல்லையில் ஏறத்தாழ முப்பது நிகழ்ச்சிகள் நடந்தன. தனி ஒருவரின் முயற்சி என்னும் அளவில் இருப்பினும் அம் முதல் செலவு ஓரளவு சிறப்பாகவே அமைந்திருந்தது; பயனுடையதாகவும் இருந்தது.

அச் **சிங்கை மலேசியச் செலவு** பற்றிய பயணக் கட்டுரை, தென்மொழியில் தொடங்கித் தொடர்ந்து, பலவகை வினையழுத்தங்களால் இடை நின்றுபோனது. பாவலரேறு அவர்கள் அதனை என்றேனும் மீண்டும் தொடங்கி நிறைவுறச் செய்தால் மிகப் பயனுடைய பயண நூலாக அஃது அமையலாம். காலம் கனிதல் வேண்டும்.

ஆனால், இம்முறை நிகழ்ந்த மலேசியச் செலவு முதல் செலவினின்று பலவகையிலும் வேறுபட்டது; தனிச்சிறப்பு வாய்ந்தது. முதலதில் மூன்று மாத எல்லையில் நடந்த கூட்டங்களை விட, இவ்விரண்டாவதின் ஒரு மாத எல்லையில் நடந்த கூட்டங்கள் மிகுதி. முந்தைய செலவில் போக்குவரத்தில் அவ்வப்பொழுது இயங்கிகள் வைத்துக்கொண்டு போகவேண்டியிருந்தது. இந்தச் செலவைத் தமிழ் நெறிக் கழகம் திட்டமிட்டு முறைப்படச் செய்ததால், தொடக்கத்திலிருந்து முடிவு வரை போக்குவரத்துக்கெனத் தனி மூடுந்து (Van) ஒன்றையே ஏற்பாடு செய்திருந்தார்கள். அது மட்டுமன்றிப் பாவலரேறு, அவர்களுடன் அம் மூடுந்

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம் பார்க்க)

# நீள் வினையால் நீளும் குடி!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்,
உணர்வும், உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும் ! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும் ;
எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்.
உரைப்பேன், மக்களுக்கே !


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3)    இதழ் எண் 73    (27-7-1986)    (பகுதி 15-18


# பஞ்சாபும் இலங்கையும் !

## இந்திய ஓர வஞ்சனைக்கு ஓர் எடுத்துக்காட்டு !

உலகின் பல்வேறு நாடுகளில் இன்று நடைபெற்று வரும் இனக் கலவரங்கள், இவ் விருபதாம் நூற்றாண்டின் இறுதியிலாவது, அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்திலாவது, ஓர் உலகப் போர் நடைபெறப்போகும் என்பதற்கான அறிகுறிகள் ஆகும் இக் கலவரங்கள் ஒருபுறம் இருக்க, இவை அனைத்தும் ஒரேவகையான மதிப்பீடுகளைப் பெறுகின்றனவா என்பதை அறிஞர்கள் சிந்திக்கவேண்டும். இல்லை என்பதே நம முடிவு.

தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் நிற வெறிக் கொடுமை, சிறுபான்மை மேலாளுமை ஆட்சியதிகார வெள்ளையர்களால், அந் நாட்டின் உரிமைக் குடிகளான பெரும்பான்மைக் கறுப்பினம் பெறுகின்ற இன அழிவை எடுத்துக் காட்டுவதாகும். ஆனால், இந்தியாவிலும், சிறுபான்மை வந்தேறிகளான ஆரியப் பார்ப்பன இனம், முதலாளியத்தோடு கைகோத்துக் கொண்டு, இங்குள்ள பெரும்பான்மையான திராவிட இனத்தை - இந் நாட்டின் பழங்குடி மக்களை - வருணாசிரம, இந்து மதக் கோட்பாடுகள் என்னும் கரவான தந்திர உத்திகளால், அடக்கி ஆண்டு அதனை மேலே ஏறவிடாமல் கொடுமைப்படுத்தி வருவதுடன், அவற்றைத் தேசியம் (Nationalism), ஒருமைப்பாடு (Integration) என்னும் பனுகு பூசி மெழுகப் பார்க்கிறதே, அதை எப்படி வேருகக் கருதமுடியும் ?

உலகின் மிகப்பழந் தேசிய இனங்களிலும் மிக மிகப் பழமை வாய்ந்ததும், பண்பாடு நிறைந்ததும், அனைத்து நிலைகளிலும் அறிவார்ந்ததுமான ஓர் இனம் தமிழினம். இதனை எவருமே மறுக்கவோ, மறைக்கவோ முடியாது ஆனால், இதன் இன்றைய நிலை என்ன ? இதன் குமுகாயப் பண்பாட்டு நிலைகளாலேயே, அரசியல் அடிமைத்தனமும், இனத் தாழ்ச்சியும் பெற்று, இன்றைய உலகில், இஃது ஒரு நாடோடி இனமாக, ஓர் ஏதிலி இனமாக, இதன் அடிப்படை வாழ்வியல் கூறுகளாகிய மொழியையும், கலை, பண்பாடுகளையும் நாகரிகச் செழுமையையும், பொருளியலையும், அரசியல் ஆளுமையையும் முழுவதும் இழந்து தவிக்கிறதே ! இதைப் பற்றி எந்த நாடு கவலைப்பட்டது; அல்லது படுகிறது ! இது தன் சொந்த நாட்டிலேயே பலவாறான துன்பங்களுக்கு ஆளாக்கப் பெற்று வருகிறதே; இக் கொடுமையை யார் எதிர்த்துக் கேட்டது அல்லது கேட்பது ?

தமிழினக் கொடுமைக்கு உச்சகட்டமாக, இன்று இலங்கையில், சிங்கள வெறிச் சிறுமதியர்களால் அங்குள்ள ஈழத் தமிழினச் சிறுபான்மையர் பெற்றுவரும் இனக் கொடுமை இருந்து வருகிறதே ! இதைப்பற்றி எந்தவொரு நாடாகிலும் உலகப் பொதுமன்றில் வாய் திறக்கவில்லையே! நாளுக்கு நாள், வேளைக்கு வேளை, நொடிக்கு நொடி அங்குத் தமிழின மக்கள் கொன்று குவிக்கப்படுகின்றனரே ! அறிவியல் வளர்ச்சியும், மாந்தவினப் பொதுமையும் பரவலாகப் பேசப் பெற்றுவரும் இவ்வுலக அரசியல் அரங்கில் இப்படிப்பட்ட ஒரு கொடுமை வேறெங்கும் நிகழ்ந்திருக்க முடியாது. ஆனால், மாந்தவிரக்கம் காட்டப் பெறவில்லையே ! கேள்வி கேட்பாரற்று, நட்ட நடுநாட்டில், வெட்ட வெளிச்சத்தில், பட்டப் பகலில் அங்கு நடந்துவரும் படுகொலைகளைக் கண்டு, எந்த நாடும் பதறவில்லையே ! உலக அரசியல் அதிகாரம் செல்லுபடியாகவில்லையே ! உலக ஒற்றுமை என்னும் ஊமைப்பேச்சு உயிரற்றுப் போனதே !

“படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்” என்னும்படி, நம் இந்திய அரசும், மிகவும் அண்டை அயல் நாடான இலங்கையில் அன்றாடம் நடைபெறும் இவ் வினவெறிக் கொள்கையை, வெறும் வம்புப்பேச்சு வக்கணைகளால் அன்றோ இதே காலக்காற்றில் ஆறப்போட்டு வருகிறது. தமிழர்களுக்கு இன்று ஒரு தனி நிலம் இல்லாக் கொடுமையாலன்றோ, இந்தக் காம்பேறி மூக்கு இந்திய அரசு, சிம்பேறி நிற்கிறது ! இதன் கண்டகம் தெரியாததா ? வஞ்சகம் விளங்காததா ? வண்ணச் சூழ்ச்சிப் புனைவுகள் அறியமுடியாதவையா? ஆனாலும் விடிவில்லையே ! விழுந்துகொண்டே இருக்கிறதே !

அண்மையில் பஞ்சாபில் நடந்த 14 இந்து மதத்தவர் கொலைக்குக் கொதித்தெழுந்த இந்திய அரசு, பல்லாயிரக்கணக்காக

[1 ஆம் பத்தி தொடர்ச்சி]

நடைபெறும் தமிழினக் கொலைக்குச் செயவர்த்தனனிடம் பல்லிளிப்புக் காட்டிப் பேசுகிறதே! தன்னின மக்கள் ஒருசிலர் செத்தால் ஒரு தீர்வு ! தமிழின மக்கள் பல்லாயிரக் கணக்கில் செத்தாலும் அதற்கு வேறொரு தீர்வா ? ‘இந்து’ என்னும் மடமை மதக் கோட்பாடும் இங்கு எடுபடவில்லையே ! ஏனென்றால், கொல்லப்படுவது தமிழினம் ! கொல்வது ஆரிய இனம் ! சிங்களன் வேற்று நாட்டான் என்பதினும் மேலாக ஆரிய இனக் கரிசனம் கட்டிக்கொண்டு அழுகிறதே ! அங்குத் தமிழின வெறுப்பு புட்டுக் கொண்டு ஒழுகிறதே !

“ பஞ்சாபில் 14 பேர் படுகொலையாம் ! உடனே தில்லியில் படைத்துறை தூள் கிளப்புகிறது ! காவல் துறை கால் பரப்புகிறது ! நகர் முழுவதும் 144 கட்டவிழ்த்து விடப்படுகிறது ! எச்சரிக்கைகள் எரிமலைச் சீற்றம் எனக் கொதிப்புரை வீசப் பெறுகிறது! கடையடைப்பு! போக்குவரத்துத் தடை! கண்டதும் சுடச் சொல்லிக் கட்டளைகள்! கொலையாளிகளின் வேட்கைக்கு அரசே கட்டியங்கூறி முற்றுகையிடுகிறது ! அடடா! என்ன பதற்றம் ! எத்துணைச் சுறுசுறுப்பு !

எங்கிருந்து வந்தது, இராசீவ் காந்தி அரசுக்கு இத்துணை அக்கறை ? அதுதான் இனச் சார்பு ! மதச் சார்பு ! ‘தான் ஆடாவிட்டாலும், தன் சதை ஆடுகிறது’ பஞ்சாபில் ! இலங்கையில் நேரும் தமிழினப் படுகொலைக்கோ, இராசீவ் காந்தியின் நெஞ்சம், வற்றிய பாலை நிலமாக கானல் நீரைக் கண்ணீராய்ப் பொழிகிறது. என்னே கொடுமை ! என்னே கொடுமை !

இந்த ஏதுங்கெட்ட தமிழினத்திற்கு இந்த இரண்டகம் இன்னும் விளங்கவில்லையே ! இந்திய அரசின் ஓர வஞ்சகத்திற்கு இதனினும் வேறென்ன எடுத்துக்காட்டு வேண்டும் ? எண்ணிப் பார்க்கட்டும் தமிழினம் ! எழுச்சி கொள்ளட்டும் தமிழர்கள் ! 0

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உள்பட்டுத் தீர்வு காண வேண்டும் என்னும் இலங்கையரசின் கருத்தைப் போராளிகளிடம் தெரிவித்துள்ளாராம்; இது குறித்து அவர் ஒன்றும் சொல்ல முடியாதாம்; போராளிகள்தாம் முடிவு செய்ய வேண்டுமாம்.

இவ்வளவும் கூறிவிட்டுக் ‘கொழும்புப் பேச்சில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து(என்ன முன்னேற்றமோ தெரியவில்லை !) நடுவணரசு அதிகாரிகளிடம் விளக்குவோம்’’ -என்று வேறு, மேலும் மேலும் இதேபடியான பேச்சுரைப் போக்குவரத்திலேயே எங்கள் காலத்தைக் கடத்திவிட இருக்கிறோம்; இனி எதிர்காலத் தமிழர்கள்தாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று கூறாமல் கூறியிருக்கிறார்.

போராளிகள் முன்பே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் :

‘‘கூட்டணியின் பேச்சுக்கும் முடிவுக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை. தமிழீழக் கோரிக்கையிலிருந்து நாங்கள் எந்த ஒரு படிக்கும் இறங்கி வர முடியாது. எங்கள் உயிர் இருக்கும் வரை போராடுவோம்’’-என்று. திரு அமிர்தலிங்கமும் அவர் கூட்டணியினரும் என்ன சொல்கிறார்கள்; நாங்களும் உயிர் இருக்கும் வரை, தமிழக அரசின் விருந்தாளிகளாக இருந்து கொண்டு பேச்சு பேச்சென்றே பேசிக்கொண்டிருப்போம்’’ என்கிறார்களா? இதைத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டியதுதானே !

ஆனால், திரு. அமிர்தலிங்கம் குழுவினர் உணர வேண்டும். இன்னொரு முறை போய் செயவர்த்தனேவுக்கு முன்பாக எதிர் நாற்காலி போட்டு உட்கார்ந்து கொண்டு, இன்னும் கூடுதலான அதிகாரங்களுடன் எதிர்க் கட்சியாக இருந்து, எஞ்சியுள்ள கொஞ்சநஞ்சம் வாழ்க்கையையும் அரசியல் பதவி நலம் காண்பதில், செலவழிப்பதே தங்கள் கூட்டணியினரின் கனவு என்று கருதியிருக்க வேண்டாம்.

இவரொடு முன்னர் ஒருகால் மிக நெருக்கமாகவும் உண்மை அன்பொடும் அவரின் நடவடிக்கைகளில் நம்பிக்கை கொண்டு பழகியிருந்தோம் என்னும் பழைய நட்புரிமையால் கூறிக் கொள்கிறோம். உங்கள் அரசியல் பதவி ஆசை பாசங்களுக்காக, தமிழினத்தின் ஒட்டு மொத்தமான ஈராயிரம் ஆண்டுக்கால உரிமை முயற்சிகளை எதிரிகளின் கால்களில் அடகுவைத்து விடாதீர்கள். அதே உணர்வில் போராளிகளுக்கும் ஒரு வேண்டுகோள்: போராளிகளே, உங்கள் உறுதியான முயற்சியில் ஓர் இம்மியும் தளர்ந்து விடாதீர்கள். உங்களை ஒற்றுமைப் படுத்திக் கொள்ளுங்கள்; வலுப்படுத்திக் கொள்ளுங்கள்; போராடுங்கள் ! போராடுங்கள் ! எஞ்சியிருக்கும் எங்களுடைய உடல்களெல்லாம் கூட நார் நாராகக் கிழித்தெறியப்படும் வரையில் போராடுங்கள் ! நம் இனத்துக்கே ஓர் ஒட்டு மொத்தமான அழிவு நேரிடுவதாயினும் உங்கள் போராட்டத்தை நிறுத்தாதீர்கள். நாம் அனைவரும் அடிமைகளாக வாழ்ந்திருந்து வாரிக்கட்டிக் கொள்வது ஒன்றுமேயில்லை. உரிமைக்காகப் போராடி உயிரை இழந்து போவதை விட, இவ்வுலகில் வேறு உயர்ந்த வாழ்க்கை என்பது எதுவுமே இல்லை ! வெல்க உங்கள் முயற்சி ! வாழ்க தமிழகம் ! வாழ்க தமிழ்நாடு’’. ஃ

உ. த. மு. க. உறவு மடல்.

# ஆசிரியர் தலையில் !

தோழர்களே,

நம் நாட்டில் இன்று ஆசிரியர் பணியின் இடம் இரங்கத் தக்கதாக இருப்பதை அறிவோம். ஆனால், இன்று ‘இந்திய ஆளும் கணம்’, ‘புதிய கல்வி’ என்ற பூச்சாண்டியை நமக்கு அறிமுகம் செய்து விட்டு, ஆசிரியர்களே எல்லாவற்றிற்கும் பொறுப்பாளிகள் என்பது போலும் பேசி வருகின்றது.

ஆசிரியர்களும், ‘யாருக்கோ வந்த விருந்து போல’ எண்ணித் தங்களின் தொடர்ச்சியான வேலையில் இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். ‘புதிய கல்வி’யின் உள்நோக்கத்தை அவர்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும் !

‘நம் தலையில்தான் எல்லாம் வந்து விடிதல் வேண்டும்’ என்று சோர்ந்து தளர்ந்து கிடக்கும் ஆசிரியர்களைத் தட்டி விட்டு, ‘‘எழுமின் விழிமின்’’ என்று ‘விவேகானந்தக் கேந்திரம்’ என்ற ஆகூவரிக் கும்பல் சூழ்ச்சி வலை வீசுகின்றது.

சாதி வெறியைப் பயன்படுத்தி மத மேன்மையை இட்டுக் கட்டிச் சிற்றூர்ப்புறக் குலத் தெய்வங்களுக்குக் கோயில் கட்டிக் குடமுழுக்கு நடத்துகின்றனர். ஒடுக்கப்பட்ட மக்கள் இப்படி ‘அறக்கட்டளை, அறங்காவலர்’ என்னும் பரிவட்டம் கட்டிக் கொள்ளும்படி தூண்டப்படுகின்றனர். சூதினர் வீசும் தூண்டிலில் பொன்னால் ஆனதென்பதால், இந்து மதத்தின் சாதிப் பாதுகாப்பு நடவடிக்கைக்கு உடன்போகித் தம அடிமை முறிச்சீட்டைப் புதுப்பித்துக் கொள்கின்றார்கள் ! இதற்கு நாட்டுப்புற ஒடுக்கப்பட்ட ஆசிரியர்களில் சிலர் பலியாகி வருகின்றனர் இவர்கள் நீண்ட தொலைநோக்கில் சிந்தித்து அடிமை ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ள முன்வருதல் வேண்டும.

ஆசிரியர்களுக்குக் கட்டுரைப்போட்டி நடத்தி, இந்து மதத்தையும், அதன் சீரழிந்த பெண்ணடிமைக் கொள்கையையும் காப்பாற்ற இக் ‘கேந்திரங்கள்’ நாக்கைத் தொங்கப் போட்டுத் திரிகின்றன.

சிறிய சிறிய ஆக்கம் கருதி முதலிழக்கும், கல்விப் பணியாளர்கள் தம் அவல நிலைமையை ஆராய்ந்து அறிந்திடல் வேண்டும் ; விழிப்புறுதல் வேண்டும் !

கண்ணகி, ஆதிரையைப் போற்றிப் பாராட்டவும், இக ‘கற்பு நெறிக் காவலர்கள்’ முன் வருவதில்லை. இவர்கள் இந்து மத ‘அகலிகை’க்காக அவல் இடிப்பவர்கள் ஆகும்! அப்போதுதான் ‘இந்திய ஒருமைப்பாடு’ கட்டப்படும்’ என்று நம்புகிறார்கள். மூளையில் ஏறி அமர்ந்துள்ள இந்த அழுக்குப பேய்களிடம் நாம் எச்சரிக்கை கொள்ளுதல் வேண்டும்.

தமிழினப் பண்பாட்டைச் சிதைக்க இவர்கள் தமிழினத்திற்கே அறைகூவல் விடுகின்றார்கள் !

தி. மு. க. தலைவர்களோ, அ. இ. அ. தி. மு. க. தலைவர்களோ, வேறு பேராயக் கட்சி, சனதாக் கட்சி, பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களோ யாராகிலும் என்ன ? செல்வரும் அதிகாரச் செருக்கும், வணிகப் பெருக்கமும் உடைய வகுப்பினர் ஆங்கிலம் மட்டுமென்ன, இந்தி மட்டுமென்ன ‘உலகைபெல்லாம் கட்டி ஆளும் ஆசையால்’ உந்தப்பெற்றுப் பல்வேறு மொழிகளைக் கற்று, பல்வேறு பண்பாட்டு முகமூடிகளை அணிந்துகொண்டு வருவதை நாம் மறுக்கவில்லை; மறைக்கவுமில்லை.

ஆனால், வயலிலும், தொழிலிலும் ஈடுபட்டு, உழைப்பைக் கூலிக்கு விற்றுப் போராடிக் கொண்டிருக்கும் மக்கள் தாய் மொழிக் கல்விக்கே தட்டுக்கெட்டுக் கிடக்கின்றனர். இந்த நேரத்தில், ‘தலைவர்களைக் காட்டி’ ஏமாற்றுதல் வேண்டாம். இந்து முன்னணித் தலைவர்களும், இவர்கள் சுட்டிக்காட்டும் மற்ற தலைவர்களும், எளிய உழைக்கும் மக்களைப் பொறுத்தவரை ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்களே ! இங்கே பிரித்துப்பேசி, அடிப்படைத் தாய் மொழிக் கல்வியைப் பறிக்கும் சூழ்ச்சிக்கு ஆள் பிடிக்க முயல்கின்றார்கள். இவர்களின் மாய விளையாட்டு இனியும் எடுபடப்போவதில்லை.

- பறம்பை அறிவன்.

# உரிமைக்கு உயிருள்ளவரை போராடுவோம் !

# உலகில் மண் விடுதலைக்குப் போராடும் மக்களினங்கள்!

- வியனரசு -

தென் ஆப்பிரிக்கா

பல தேசிய கருப்பின மக்களைக்கொண்ட தென் ஆப்பிரிக்காவில் மாநிலப் பிரிவுமுறை பலமிக்குறைவான களின் ஆளுமையின் கீழ் மக்கள் உரிமையோடு வாழ்ந்து வந்தார்கள். 1752 ஆம் ஆண்டில் முதன் முறையாக நுழைந்த மேற்கிந்திய காண்டல் கூட்டங்களில் ஒன்றான ஒல்லாந்தர்கள் நன்னம்பிக்கை முனையில் தமது ஆளுமையை முதலில் நிறுவினார்கள். பிறகு ஆங்கிலேய வெள்ளையர்களும் சிறு சிறு ஆளுமைப்பகுதிகளை அமைத்துக்கொண்டு ஆட்சி செலுத்தி வந்தனர். இதை உணர்ந்து கொண்ட கருப்பின மக்கள் சிறு சிறு குழுக்களாகக் கூடி பிறர் ஆளுமைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி, அறவழியில் கிளர்ச்சிகளை நடத்தி தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தனர்.

கருப்பின மக்களின் உரிமைப் போராட்டங்களை கண்டு கொண்ட வெள்ளையர்களும், ஒல்லாந்தர்களும் தங்களுக்குள் இருந்த வேறுபாடுகளை மறந்து, கூட்டுச் சேர்ந்து கொண்டு, கருப்பின மக்களை அடிமைப்படுத்தி அவர்கள் உழைப்பைச் சுரண்டிக் கொண்டேயிருந்து வந்தார்கள். 1906 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட பெரும் கிளர்ச்சிகளில் கருப்பின மக்களைக் கடுமையானமுறையில் தாக்க வொண்ணாக் கொடுமைகள் செய்து ஒடுக்கி, போராட்டங்களைப் நசுக்கிவிட்டுத் தன்வசப்படுத்தி இருந்த பகுதிகளை யெல்லாம் இணைந்து ஓர் ஆளுமையின் கீழ் 1910 ஆம் ஆண்டு வெள்ளை இனவெறி அரசு, மண்ணின் உரிமையாளர்களான கருப்பின மக்களுக்கு எதிரான உலக சட்டவரையறைகளுக்குப் புறம்பான முறையில் வெளியறிவிப்புச்செய்து கருப்பின மக்களை அடிமைப்படுத்தினர்.

இவ் வெள்ளை நிறவெறி அரசை எதிர்த்துச் சிறு சிறு குழுக்களாகப் போராடிவந்த ஆப்பிரிக்க அனைத்துக் குழுக்களையும் இணைத்துத்தேசியளவிலான ஒரு பேரியக்கமாக ஆப்பிரிக்க தேசியப் பேராயம் என்ற பெயரில் 1912 ஆம் ஆண்டில் உருவாக்கிப் பெரும் அளவில் அறவழிப் போராட்டங்களை நடத்திக் கருப்பின மக்களுக்குச் சில சலுகைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்து உரிமை கோரியது. வெள்ளையர் பிரிட்டோரிய அரசோ சலுகைகளை மறுத்து கோரிக்கைகளைப் புறக்கனித்தும், உரிமை களைப் பறித்தும் தொடர்ந்து அடக்கு முறைகளைக் கையாண்டு போராட்டங்களை ஒடுக்கியும், போராடும் மக்களை வன்செயல்கள் மூலம் நசுக்கியும் வந்தன.

ஆப்பிரிக்க தேசியப் பேராயத்தின் ஊடாகப் போராட்டப் பாதையில் படிநிலை வளர்ச்சிப்பெற்று ஒரு புதியஇயக்கமாக முற்போக்குச் சிந்தனைகளுடன் இளைஞர்கள்ஒன்று கூடி ஆப்பிரிக்க தேசியப் பேராய இளைஞர்பேரவையை 1944ஆம் ஆண்டு தோற்றுவித் தார்கள். இப்பேரவை அறவழிப் போராட்டங்களைத் தவிர்த்து மறவழியில் கருவியேந்திப் போராடும் நிலைக்கு உந்தப்பட்டுப் போராட்டங்களில் ஈடுபடலாயினர்.

இவ் வியக்கங்களைத் தோற்றுவித்த இளைஞர்கள் தாம்இன்றைய பெரும் தலைவர்களாக விளங்கும் ஆலிவர் டாம்போ, நெல்சன்மாண்டேலா போன்ற வர்களும், அண்மையில் உலக நாடுகளின் எதிர்ப்பு களுக்கிடையில் தூக்கிலிடப்பட்ட விடுதலைப் பாவலன் பெஞ்சமின் மொலாய் போன்றவர்களும்ஆவர். இன்றைய நிலையில் உலகில் பெரும்பாலான நாடு களின் எதிர்ப்பைப் பெற்ற பிரிட்டோரிய அரசு வீழ்ச்சிப் பாதையை நோக்கி விரைந்து கொண்டி ருக்கிறது. உலக நாடுகளின் மக்களின் நல் ஆதரவைப் பெற்ற கருப்பின மக்கள் விடுதலையை நோக்கி முன்னேறி வருகிறார்கள்.

"வெள்ளை நிறவெறி அரசுக்கும், கருப்பின மக்களுக்கும் இடையில் நடக்கும் உரிமை மீட்புப் போராட்டத்தில் இறுதி வெற்றி மண்ணின் உரிமையாளர்களான கருப்பின மக்களுக்குத்தாம். இப் போது மடிந்து கொண்டிருக்கும் கொரில்லாக்கள் அனைவருமே விடுதலைக்காகவே இறந்து கொண்டி ருக்கிறார்கள். எனக்குக் கொடுக்கப்பட்ட தூக்குத் தண்டனையை மனநிறைவோடு ஏற்றுக் கொள் கிறேன். கருப்பர் ஒரு நாள் ஆளப்போவது உறுதி. நாம் விடுதலையை அடையப் போகிறோம். விடுதலை இதோ மிக கையருகே போராளிகளே விடாதீர் கள் தொடர்ந்து போராடுங்கள் என்று விடுதலைப் பாவலன் பெஞ்சமின் மொலாய் தூக்கு மேடையில் நின்று இறுதியாகப் பாடிய விடுதலைப் பண் குறிப்பி டத்தக்கது.

எரித்தீரியா

ஆப்பிரிக்கா கண்டத்தின் வடகிழக்குப்பகுதியில் உள்ள ஒரு சிறு நாடுதான் எரித்தீரியா. இன்று எத்தியோப்பியா எரித்திரியாவை தன்னுள் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்கு முன்பிருந்தே இத்தாலிய வெள்ளையர் களின் காண்டல் வேட்டைக் காடாக இருந்து வந்தது. இதை எரித்திரிய மக்கள் போராடி வந்தார்கள் இதன் விளைவாக எரித்திரியாவை 1952 ஆம் ஆண்டு உலக ஒன்றியப் பேரவை (ஐ.நா.) தன்னாட்சி பெற்ற தனி நாடாக வெளியறிவிப்புச் செய்தது. பின்பு 1962 ஆம் ஆண்டு எத்தியோப் பியா, எரித்திரியாவை வலுக்கட்டாயமாக தன் ஆளுமையின் கீழ் இணைத்துக் கொண்டது. இதை எதிர்த்து எரித்திரிய மக்கள் போராடுவதுடன் தங்கள் நாட்டை மீட்டுத் தனி நாடாக அமைக்க வேண்டி எரித்திரிய மக்கள் விடுதலைப்படை என்ற கொரில்லாப் படையை அமைத்துப்போராடி வரு கிறார்கள்.

ஏற்கனவே கடும் வறட்சியால் ஏற்பட்ட பஞ்சத் தால் உருவாகிய பொருளியல் நெருக்கடியில் அல் லல்பட்டுக் கொண்டிருக்கும் எத்தியோப்பிய அரசு மக்கள் விடுதலைப்படை நடத்தும் கடும் தாக்குதலை ஈடுகொடுக்க முடியாமல் நிலைகுலைந்து வருகிறது. இவ் விடுதலைப்படை, வாய்சு ஆப் எரித்திரியா எனும் தனியான வானொலி நிலையம் வைத்து வெற்றியுடன் செயலாற்றி வீறு நடைபோட்டு வருகிறது.

குவிபெர்க் (கனடா)

ஒன்றுபட்ட கனடா கூட்டாட்சியில் ஒரு மாநிலம்தான் குவிபெர்க், கனடாவின் தென்கிழக் குப்பகுதியில் உள்ள இம் மாநிலத்தில் உள்ள தொல் குடி இனமக்கள் தங்களுக்கே உரிய தனிமொழி, பண்பாடு, கலை, பழக்க வழக்கங்களுடன் தனித்து வாழ்ந்து வருகிறார்கள்.

தொல்குடி மக்கள் வாழும் குவிபெர்க் பகுதியில் உள்ள இயற்கைக் கனிவளங்களையும், செழிப்பான வேளாண்மை நிலங்களையும் கனடிய மக்கள் ஒன்றியம்தேச ஒற்றுமை என்ற பெயரில் கையகப் படுத்திச் சுரண்டி வருவதோடு, மண்ணின் சொந்த மக்கள் இரண்டாம் தர க்குடிமக்களாக்கும் முறை யில் தங்கள் செல்வாக்குகளை உயர்த்தி வரு கிறார்கள்.

இதை உணர்ந்து கொண்ட தொல்குடி மக்கள் தாங்கள் வாழும் நிலப்பரப்பைத் தனியாக வரை யறுத்து மற்றவர் கையகப்படுத்தும் முறையை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமெனவும், தனி நிலப் பரப்பாக அறிவித்த அந்தப் பகுதிக்கும். மக்களுக்கும் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய மாநிலத் தன்னாட்சி உரிமையைக் கொடுக்கவேண்டும் தங்கள் மொழி, பண்பாடு, கலை, பழக்க வழக்கங் களில் கனடிய நடுவண் அரசு கைவைக்கக்கூடாது போன்ற நயன்மையான கோரிக்கைகளை வைத்து குவிபெர்க் மக்கள் போராடி வருகிறார்கள். பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய மாநிலத் தன்னாட்சி கோரிக்கை கனடிய அரசியல் சட்டத்திற்கே எதி ரானது புறம்பானது என்றாலும், தொல்குடி இன மக்கள் நடத்திய பெரும் போராட்டங்களினால், சட்டத்தையே திருத்தி அக் கோரிக்கையை ஏற்கக் கூடிய நிலை கனடிய அரசுக்கு ஏற்பட்டுள்ளது. குவி பெர்க்கு மக்கள் நடத்தும் போராட்டங்களுக்கு அங் குள்ள பொதுவுடைமை இடது சாரி இயக்கங்கள் பெருமளவு ஆதரவுடன் துணைநின்று வருகின்றன.

## ஒற்றுமை வேண்டும்!

பாவலர். கடலூர் மணிமாறன்.

வல்லாண்மை அமெரிக் காவும்
வன்னெஞ்சப் பாகிஸ் தானும்
பொல்லாத இசுரேல் நாடும்
புழுங்கிய ஈழ மண்ணில்
அல்லலை விளைவிக் கின்ற
அறக்கேட்டை உலக நாட்டார்
இல்லாமல் தடுப்ப தற்கே
ஏனின்னும் தயங்கு கின்றார்!

ஆப்பிரிக்க நாட்டில் வாழும்
அடிமையர் கறுப்பி னத்தார்
காப்புக்கும் விடுத லைக்கும்
கண்ணீரைச் சொரிவோர் கண்ணில்
தீப்பற்றி எரியும் ஈழம்
தெரிவதே இல்லை போலும்?
பூப்பந்தல் வேலை யாவும்
புயலின்முன் நிற்ப துண்டோ?

வருந்துயர் அனைத்தும் தாங்கி
வன்மைசேர் ஈழ நாட்டில்
குருதியை நாளும் சிந்திக்
கொடுமையின் விளிம்பில் நின்றே
பொருகிறார் துமுக்கி யேந்திப்
புலிகளாய்க் களத்தி லுள்ளார்!
அருந்தமிழ் நாட்டீர்! உங்கள்
அமைதி மானங் காக்கும்?

ஒற்றுமை உறுதி ஆண்மை
உயர்வான நோக்கம் இன்றேல்
செற்றவர் சிதைந்து வீழச்
சீர்மிகு உரிமை வாழ்வைப்
பெற்றிட இயலா தன்றோ?
பெரும்புகழ் நிலைக்க அன்றோர்
உற்றிடும் துயர்கள் யாவும்
ஒழியும்நாள் எந்த நாளோ?

தொலைநோக்கும் அறத்தைப் பேணும்
தூயநற் சால்பும் கொள்கை
விலைபோகாத் துணிவும் வீறும்
வீரமும் தலைவணப் பண்பும்
நிலையான உரமும் வாழும்
நிலந்தனை வென்றெ டுக்கும்
உலைவிலா நினைவும் இல்லா
உட்பகை தருமோ வெற்றி?

தம்கையால் தமது கண்ணைத்
தகர்ப்பதும் அறிவோ? சொல்வீர்!
நம்மவர் தனைநொ றுக்கி
நாட்டினை மீட்கு முன்பே
வெம்பியே பதவிப் போரால்
வீழ்ச்சியைத் தழுவு வீரேல்
நம்பினோர் இரண்ட கத்தால்
நைந்துமே அழிதல் திண்ணம்!

விடுதலை மறவர் கட்கு
வினைவலி தெரிதல் வேண்டும்!
விடுதலைப் போரா ளிக்கு
வியத்தகு ஈகம் வேண்டும்!
விடுதலை விழைவோ ருக்கு
வெம்பழி புரியு மெண்ணம்
கெடுதலைத் தருமே யன்றிக்
கிளர்புகழ் விளைத்த லேது?

வெம்புலி யனையீர்! உங்கள்
வீரத்தில் கறைப டிந்தால்
அம்புவி நகைக்கும்! மேலும்
அவலமே தொடரும்! வேண்டும்
செம்புகழ்த் தமிழீ ழத்தின்
செங்கதிர் ஒலியும் வாரா!
உம்மிடம் விழைவ தெல்லாம்
ஒற்றுமை! உணர்வீர் இன்றே!

தாராபுரத்தில்

## உ. த. மு. க. அன்பர்களின் கலந்தாய்வுக் கூட்டம்!

மேழம் திங்கள், 28 ஆம் பக்கல், காரிக்கிழமை யன்று, தாரை வட்ட உ. த. மு. க. நண்பர்களின் கலந்தாய்வுக் கூட்டம், அண்ணா நகர், இராமையா திருமண மண்டபத்தில் நடந்தது.

உ. த. மு. க. துணைப் பொதுச் செயலர், திரு. **தென்னவன்கோ** அவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்தார்கள். பழனி வட்டச் செயலர் திரு. **மணிமுத்து** அவர்கள் தலைமையுரைக்குப்பின் அறிமுகம் நடந்தது. திருவாளர்கள்: கழக ஓவியர் உடுமலை **அறவாழி**, புலவர். **அரசு மணியன்**, பூண்டி **மறவன்**, போளைப் பட்டி **செம்மல்**, **பாரமடையூர்சின்னசாமி**, **சி. பாசு கரன்**, **கன்னல்**, எலுகாம்வலசு புலவர். **சாமியப்பன்**, வளவாய்ப்பட்டனம் **இ.வேந்தனார்**, **கி.சீரங்கராயன்** **இளமுகுந்தன்**, **செ. சண்முகம்**, **தாரை. தமிழ் வென்றி**, **பழனிச்சாமி** மற்றும் நண்பர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

திரு. **தென்னவன்கோ** அவர்கள், 1. அணைப் பட்டி பயிற்சி வகுப்பிற்குப் பின்னர், உ. த. மு. க. செயற்பாடுபற்றியும், 2. தமிழ் ஈழ விடுதலையில் நமது இயக்கத்தின் நோக்கும், போக்கும் பற்றியும், 3, தமிழீழ விடுதலையும்-தமிழக விடுதலையும் ஆகிய பொருள்களை விளக்கி, 5 மணி நேரம் செறிவும், உணர்வுமிக்க உரையாற்றினார். விடுதலைப் போராளி கள், தமிழ் மண்ணில் பாவலரேறு ஐயா விடம் கொண்டுள்ள ஈடுபாடு முயற்சியைப் பற்றி உண்மைநிலையை உணர்த்தினார்.

இரவு உணவுக்குப் பின்னர், வினா-விடை முறை யிலே மொழியியல், மெய்யியல், குமுகவியல் பற்றிய செய்திகளை எளிமை, இனிமை, பொறுமை கலந்து விடியல் 4 மணி வரை விளக்கினார். உ.த.மு.க.-வின் கொள்கை நிலைப்பாட்டு முயற்சிகள் - இடையூறுகள் இருட்டடிப்புகள் பற்றி சான்றுகளோடு கருத்துரைத் தார். எளிய முயற்சியில், அரிய செய்திகளை அறிந்து மனநிறைவோடு கூட்டம்நிறைவுற்றது.

# மண் உரிமையே மக்களின் உரிமை!

பாவலரேறு அவர்களின்...
(நிகழ்ச்சிச் சுருக்கம்)

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தில். அதன் ஒட்டுநரோடு த. நெ. கழகத் தலைவர், பாவலர். திரு. அ. பு. திருமாலன், துணைத் தலைவர்' திரு. ஒளியழகனூர், செயலர், திரு. பழ. வீரன் (இவர்கள் இருவரும் சில ஊர்களுக்கு வரவில்லை), பொருளர், திரு. சிற்றரசு, வட்டப் பேராளர், திரு. கன்னையா, படப் பிடிப்பாளர், திரு. வேல் மறவன் (வேலாயுதம்) ஆகியோர் தொடர்ந்தும், திரு. திருமாவளவன், தமிழாசிரியர் திருச்செல்வம் ஆகியோர் சிற்சில இடங்களுக்கும் உடன் வந்தனர்.

திருவாளர்கள். சிற்றரசும், கன்னையாவும் இறுதி வரை பாவலரேறு அவர்களின் நூல் விற்பனையில் மிகப் பொறுப்போடும், கவனத்தோடும் ஈடுபட்டது மிகவும் பாராட்டத்தக்கது.

தமிழ்நெறிக் கழக அமைப்பாளரும், தலைவரும் ஆகிய பாவலர். **திருமாலன்** அவர்கள், 56 அகவையுடையவர். தீவிரமான தமிழ்ப்பற்றும் தமிழினப் பற்றும் மிகுந்தவர். பழுத்த பட்டறிவு நிரம்பியவர். ஏற்கனவே மலேசிய திராவிடர் கழகத்தில் பேராக் மாநிலப் பொறுப்பாளராகவிருந்து, அதன் கொள்கை நெகிழ்ச்சியால் விலகி, மூன்றாண்டுகளுக்கு முன்னர் மொழி, இனம், சமயம் என்னும் மூன்று கோட்பாடுகளுடன் **'தமிழ் நெறிக் கழகம்'** எனும் ஒரு தனி இயக்கம் கண்டவர். தமிழர்களுக்கு அனைத்து நிலைகளிலும் ஏற்பட்ட இழிவு, அறியாமை, அடிமைத்தனம், உரிமையிழப்பு இவை நீங்கவேண்டும் என்பதும், அவர்களுக்கென்று இவ்வுலக உருண்டையில் ஒரு தனி நாடு அமையவேண்டும் என்பதிலும் இக்கழகம் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு வருகிறது. குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்ல வேண்டுமானால், பாவலரேறு கண்ட **'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்'**திற்கு மலேசியாவைப் பொறுத்த அளவில் இஃதொரு துணைக்கழகம்போல் இருந்தும்-இயங்கியும் வருகிறது எனலாம்.

இதன் சார்பில்தான் பாவலரேறு அவர்கள் இவ்விரண்டாம் மலேசியச் சுற்றுச் செலவை மேற்கொண்டார்கள். எனவே, இச் செலவு மிகவும் சிறப்புடையதாகவும், பயனுடையதாகவும் இருந்தது என்பதில் மிகையில்லை. இதன் சிறப்பியல்கள் பல. இதைப் பற்றி விரிவாக எழுதும்பொழுது, இவைபற்றியும் விளக்கமாகவும் எழுதப்பெறும். இக்கால் ஓரிரண்டு சிறப்பு நிகழ்ச்சிகளை மட்டும் ஒரு சோற்றுப் பருபதமாக இங்கே குறிப்பிடுவோம்.

இந்தச் செலவில் ஏற்பாடு செய்யப்பெற்ற நிகழ்ச்சிகள் அனைத்துமே மிகச் சிறப்பானவை என்றாலும், ஒரு சில நிகழ்ச்சிகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை, என்றென்றும் நினைவில் நிற்பவை. பொதுவாகவே, அனைத்து நிகழ்ச்சிகளிலுமே பாவலர். **திருமாலனார்** அவர்கள் பங்கு பற்றியதுமன்றி, தலைமைப் பொறுப்பையோ, பாவலரேறு அவர்களையும், அவரின் தொண்டு நிலைகளையும் அறிமுகப்படுத்தும் கடமையையோ ஏற்று மிகவும் சிறப்பாகப் பாடாற்றினார் என்பது மிகவும் குறிக்கத் தகுந்ததாகும்.

இவ்வகையில், தலைவரைப் போலவே தமிழ் நெறிக் கழகப் பொறுப்பாளர்கள் அனைவருமே பாவலர் அவர்களுடன் அன்புடனும், இணக்கமுடனும், மதிப்புடனும், பொறுப்புடனும் நடந்துகொண்டு, மிகவும் கட்டுப்பாடாகவும், கண்ணியத்துடனும் இயங்கிப் பாவலரேறு அவர்களின் பணி நன்கு நிறைவேறுவதற்குப் பெரிதும் துணை நின்றார்கள் என்பது மிகைபடக் கூறுவதாகாது.

இச் செலவில் நடத்தப்பெற்றன யாவும் தமிழ் நெறிக் கழகச் சார்பில் ஏற்பாடு செய்யப்பெற்ற தனித் தனிநிகழ்ச்சிகளே. இவற்றுள் சூன் மாதம் 6,7,8 ஆகிய மூன்று நாள்களில், தைப்பிங் மாநகரில் பாவலரேறு அவர்களின் திருக்குறள் தொடர் சொற்பொழிவும் நிகழ்ந்தது. அதனை ஏற்பாடு செய்த பெருமைக்குரிய, **து. சுப்பிரமணியம்** அவர்கள் ஆவார். இவர் நீண்ட நாளைய தென்மொழி அன்பரும், பாவலரேறு பால் உண்மை அன்பும், மதிப்புமுடைய அருளாளரும் ஆவார். இத்தொடர் நிகழ்ச்சியின் நினைவாக ஒரு மலரையும், இரண்டாம் சொற்பொழிவு நாளில், இவர் வெளியிட்டுப் பெருமைப்படுத்தியதுடன், அம் மலர்களின் விற்பனைத் தொகையினையும் தென்மொழிக்கு அன்பளிப்பாக வழங்குவதாகக் கூறினார்.

24-5-86 அன்று நடந்த, பாவலரேறு அவர்களின் 9 ஆம் நிகழ்ச்சி, மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் பெட்டாலிங் செயா (Petalling Jaya) என்னும் பகுதியில், சிறப்பும், புகழும், அழகும், அமைதியும் மிக்க வளிநிலைப்பாட்டு (Air-conditioned) அரங்கத்தில் (Auditorium) நடைபெற்றது. இந்த அரங்கத்தில் பெரும்பாலும் தமிழ் நிகழ்ச்சிகளே நடைபெறுவதில்லை. அவ்வாறு நடந்தாலும், அஃது அரசுச் சார்பானவர்களால்தாம் நடத்த முடியும்.

[தொடர்ச்சி 6 ஆம் பக்கம்]

# பாவலரேறு அவர்களின்
# 2-ஆம் மலேசியச் சுற்றுச் செலவு!

- மொத்த நாள்கள்: 35.
- மொத்த உரை நிகழ்ச்சிகள்: 34.
- மொத்தக் கலந்துரையாடல்கள்: 10.
- மொத்த உரை நேரம் ஏறத்தாழ: 35 மணி.
- கலந்துரையாடல் நேரம் 20-15 மணி.
- பயணம் செய்த தொலைவு ஏறத்தாழ 5,000 கற்கள்ஆகும்.
- அனைத்து உரை நிகழ்ச்சிகளும், ஏறத்தாழ 35 ஒலி, ஒளி நாடாக்களில் பதிவு செய்யப்பெற்றுள்ளன.
- புறப்பாடு: 15-5-1986 திரும்பல்: 19-6-1986.
  வானூர்தி: Malaysiyan Air Service-(MAS)

நிகழ்ச்சிகள் விளக்கம்

| எண். | பக்கலும், கிழமையும் | நேரம் | இடம். | அரங்கம் | உரை நேரம் (மணி) | உரை நிகழ்ச்சி விளக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 15-5-86 வியாழன். | மாலை 6-30 | பினாங்கு | தாலூது உணவகம், | 1.30 | வரவேற்பு விருந்து |
| 2. | 17-5-86 காரி | மாலை 8-00 | ஓலிரூடு (Holy Rood) | தோட்டத் தொழிலாளர். பொதுமன்றம். | 2.00 | சிறப்புரை (தமிழ், தமிழினம், வரலாறு) |
| 3. | 19 5-86 திங்கள். | மாலை 8-30 | கோலபில்லா (Kualapilah) | சோசேதோட்டம். (Juaseh Garden) பொதுமன்றம், | 2.10 | ,, |
| 4. | 20-5-86 செவ்வாய் | பிற்பகல் 4 மணி. | பகாவ் நெகிரி செம்பிலான் | செ. ய்டன் வளவர் (St. Aiden) பள்ளி மண்டபம் | 2.00 | சிறப்புரை திருக்குறள் மெய்யியல். |
| 5, | ,, | இரவு 8-30 | பகாவ் (Bahau) | பூங்காராய விடுதி மண்டபம் | 1.00 | வரவேற்பு விருந்து (வரவேற்பு-ஏற்புரை) |
| 6. | 21-5-86 அறிவன் | பிற்பகல் 3-45 | பாலோஸ் (Gemas) | தேசிய இடைநிலைப் பள்ளி மண்டபம் | 1.45 | தமிழர் மொழி, இன நிலைபண்பாடு |
| 7. | 23-5-86 வெள்ளி | பிற்பகல் 4-00 | கெமயூரன்-பகாங் | Pingpong Hall (சீனருடையது) | 1.45 | தமிழர் அறம் இந்து சமயப் போலிக்கோட்பாடுகள் |
| 8, | ,, | இரவு 8-20 | ரொம்பின் (Rompin) | கெமாயன் தோட்டப் பொது மன்றம், | 2.00 | இலக்கியம், தமிழர் சமயம் |
| 9. | 24-5-86 காரி | மாலை 6-30 | பெட்டலிங் செயா -செலாங்கூர் | மக்கள் மன்றம் (Civic Centre) | 4-00 | மொழி, இனம், நாடு வரலாறு |
| 10. | 25-5-86 ஞாயிறு | மாலை 5-00 | பத்தாங் செலாங் | தோட்ட மண்டபம் | 3-00 | தமிழ் மொழியின் சிறப்பியல்கள் |
| 11, | 26-5-86 திங்கள் | மாலை 6-30 | சோகூர்பாரு | இடுகாடு | 0-30 | அன்பரசன் மறைவு-இரங்கல் உரை |
| 12. | 28-5-86 அறிவன் | மாலை 7-00 | சவுக்கிட் | பிலால் உணவகம் | 3-00 | பாவேந்தர் விழா உரை |
| 13, | 29-5-86 வியாழன் | மாலை 7-30 | கோலக் கிள்ளான் | திருவள்ளுவர் மண்டபம் | 3-00 | திருக்குறள் மொழி, சமயம் |
| 14. | 30-5-86 வெள்ளி | இரவு 8-00 | சுங்கைக் காப்பித் தோட்டம் உளுசெலாங்கூர் | தோட்ட மண்டபம் | 1-30 | தமிழின வரலாறு |
| 15. | 31-5-86 காரி | பிற்பகல் 3-30 | குவாலா குடிபாரு | ஆசி கமருதீன் பள்ளித் தமிழ் மன்றம் | 2-45 | தமிழ்மொழி, இன வரலாறு, தமிழர் சமயம் |
| 16. | ,, | இரவு 8-40 | செலாயங்பாரு | செர்பாகூ மண்டபம் | 3'30 | மொழி, இலக்கியம் |
| 17. | 1-6-86 ஞாயிறு | மாலை 7-20 | ஈப்போ | மாரியம்மன் கோயில் வழிபாட்டு மண்டபம் | 2-30 | மொழி, இனம், சமயம் |
| 18. | 2-6-86 திங்கள் | இரவு 8-20 | ஈப்போ-மகிழம்பூ | இராச இராசேசுவரி அம்மன் வழிபாட்டு மண்டபம் | 2-30 | திருக்குறள் வாழ்வியல் |

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

**தொண்டு செய், தமிழுக்குத் துறைதோறும், துறைதோறும்!**

பாவலரேறு 2 ஆம் மலேசியச் சுற்றுச் செலவு [முன்பக்கத் தொடர்ச்சி]

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19. | 4-6-86 அறிவன் | மாலை 4-00 | பாரிட் புந்தார் (Parit Buntar) | தமிழர் சங்கக் கட்டிடம் | 2-00 | மொழி, இனம், நாடு |
| 20. | ,, | இரவு 8-15 | பிறை | தமிழ்ப் பள்ளி | 2-00 | ,, |
| 21. | 5-6-86 வியாழன் | மாலை 6-05 | டப்ளின் தோட்ட நடுவண் பிரிவு | தோட்ட மண்டபம் | 1-30 | தமிழ், தமிழின வரலாறு |
| 22. | 6-6-86 வெள்ளி | மாலை 7-10 | தைப்பிங் (Taiping) | (Y.M.H.A.) இந்து இளைஞர் சங்க மண்டபம் | 2-40 | திருக்குறள் தொடர்பொழிவு (முதல் நாள்) |
| 23. | 7-6-86 காரி | மாலை 7-25 | ,, | ,, | 2-15 | ,, (2 ஆம் நாள்) மலர் வெளியீடு |
| 24. | 8-6-86 ஞாயிறு | மாலை 7-30 | ,, | ,, | 3-45 | ,, (3 ஆம் நாள்) |
| 25. | 9-6-86 திங்கள் | பகல் 12-10 | பகான்செருய்-தாலி ஆயர் செம்பனை ஆலை | அருள்மிகு முனீசுவரர் கோயில் மண்டபம் | 1-00 | அண்ணாத்துரை - சுசீலா திருமண நிகழ்ச்சி |
| 26. | ,, | மாலை 4-45 | சுங்கை கரையான்தோட்டத் தொழிலாளர் பகுதி | அருள்மிகு நிர்க்குண முத்து மாரியம்மன் மண்டபம் | 1-25 | இலக்கியம், மொழி வரலாறு |
| 27. | 10-6-86 செவ்வாய் | மாலை 4-30 | இலாரெட் - துரோங் | பொது அவை மண்டபம் | 2-00 | மொழி, இன வரலாற்று நிலைகள் |
| 28. | 11-6-86 அறிவன் | பிற்பகல் 4-00 | செர்டாங் கெடா | பந்துலிந்தாங் தோட்டம் | 1-00 | தமிழர் வரலாறு சுருக்கம் |
| 29. | ,, | மாலை 7-30 | பொன்டொக் தஞ்சோங் | தமிழ் இளைஞர் மணி மன்றம் | 1-30 | தமிழியல் சிறப்பு |
| 30. | 12-6-86 வியாழன் | மாலை 6-00 | பெர்லிசு-கங்கார் | இந்தியர் சங்க மண்டபம் | 2-00 | தமிழின் சிறப்பியல்கள் -இன வரலாறு |
| 31. | 13-6-86 வெள்ளி | மாலை 6-00 | சுங்கைப் பட்டாணி | டேவன் சிறிகெனங்கான் மண்டபம் | 2-15 | மொழி, இனம், சமயம் |
| 32. | 14-6-86 காரி | இரவு 8-05 | செலாமா | டத்தோ அசி உசேன் இடை நிலைப் பள்ளி மண்டபம் | 2-30 | தமிழ் நெறிக் கழகக் கூட்டம் |
| 33. | 15-6-86 ஞாயிறு | இரவு 8-00 | ஈப்போ | Hockamn Garden Park ச. சி. சுப்பையா முன்றில் | 0-30 | பாராட்டு அன்பளிப்புக் கூட்டம் நன்றியுரை |
| 34. | 18-6-86 அறிவன் | இரவு 9-00 | ஈப்போ பெட்டாலிங் செயா | மலேசியத் தொழிற் சங்கப் பேரவை விடுதி மண்டபம் | 1-15 | வழியனுப்புக் கூட்டம் |

## கலந்துரையாடல் நிகழ்ச்சிகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 16-5-86 வெள்ளி | காலை 10-30 | செலாமா | உரசினர் ஓடவு விடுதி | 1-30 | தமிழ் நெறிக்கழக அன்பர்களுடன்-கருத்து விளக்கம் |
| 2. | ,, | மாலை 6-30 | ,, | ,, | 2-20 | ,, அன்பர் அறிமுகம் கலந்துரையாடல் |
| 3. | 17-5-86 காரி | காலை 9-30 | ,, | ,, | 2-00 | |
| 4. | ,, | இரவு 12-00 | ,, | ,, | 3-30 | மெய்ப்பொருள் விளக்கம் |
| 5. | 18-2-86 ஞா. | காலை 11-00 | ,, | ,, | 2-00 | ,, |
| 6. | ,, | இரவு 3-15 | சா ஆலம் செலாங்கூர் | முனிசாமி வீடு | 1-30 | கருத்து விளக்கம் தமிழக நிலை |
| 7. | 19-5-86 திங், | காலை 8-00 | ,, | ,, | 1-30 | தென்மொழி தோற்ற - வளர்ச்சி நிலைகள். |
| 8. | 3-6-86 செவ். | காலை 10-30 | செலாமா | தமிழ் நெறிக் கழகப் பணிமனை | 2-00 | தமிழக அரசியல் - குமுகாய நிலைகள். |
| 9. | ,, | பிற்பகல் 5-30 | ,, | ஆட்கு மனை | 2-15 | தொடக்கக் கால இயக்க முயற்சிகள் - தமிழீழப் போராட்டங்கள். |
| 10- | 16-6-86 திங். | மாலை 6-00 | தெலுக் கான்சன் | மாரியப்பன் வெற்றிச்செல்வி வீடு | 1·30 | மெய்ப்பொருள் விளக்கம். |

## பாவலரேறு அவர்களின்...
### (நிகழ்ச்சிச் சுருக்கம்)

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எனவே, பெரும்பாலும் அரசு நிகழ்ச்சிகள்தாம் மலாய் மொழியிலோ, சீன மொழியிலோ இதில் நடைபெறுவது வழக்கம். ஏனெனில், இந்த அரங்கத்திற்கு நான்கு மணி நேரத்திற்கு வாடகை மட்டும் 1,500 மலேசிய தாலர் ஆகும். அஃதாவது, இந்திய மதிப்பிற்கு ஏறத்தாழ 7,500 உருபா. இதை அறிந்த பின்னர் பாவலரேறு அவர்கள், இத்துணையளவு செலவு செய்ததற்கு மிக வருத்தமுற்று, இவ்வளவு வாடகை கொடுத்து, இந்த நிகழ்ச்சியை நடத்தியிருக்கவேண்டுமா? என்று அந் நிகழ்ச்சிப் பொறுப்பாளர்களாகிய பெருமைக்குரிய திருவாளர்கள். **முனுசாமி** அவர்களும், **துரை** அவர்களும் (இவர்கள் இருவருந்தாம் பாவலரேறு அவர்களைச் செலாமா, **தமிழ் நெறிக் கழகச்** சார்பாகத் தமிழகத்திற்கு வந்து நேரில் அழைப்பு விடுத்தவர்கள்) ஆகியோரைக் கேட்டதற்கு, ‘நம் நிகழ்ச்சியை எப்படித்தான் நடத்தப் போகிறோம் என்று ஏளனமாகவும் எக்களிப்பாகவும் பேசிக் கொண்டிருந்த சிலருக்கு நம் ஆர்வத்தையும் ஆற்றலையும் விளக்கவே இப்படிச் சிறப்பாகவும் பெரும் செலவிலும் இம் மண்டபத்தை வாடகைக்கு எடுத்தோம்’ -என்று விடை கூறினர்கள்.

இவ்விரண்டாம் மலேசியச் சுற்றுச் செலவிலேயே இம் மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில், தான் பாவலரேறு அவர்கள் நான்கு மணிநேரம் பேசினர்கள். நிகழ்ச்சி அவ்வளவு சிறப்பாக அமைந்ததாகப் பெருமிதத்தோடு கூறினர்கள். திரளாகக் கூடியிருந்த மக்களும் இறுதிவரை மிக அமைதியாக இருந்து கேட்டிருக்கிறர்கள்.

31-5-86 அன்று குவாலா குடிபாரு என்னும் ஊரில் நெடுநாளைய தென்மொழி அன்பரும் பாவலரும் ஆகிய ஆசிரியர் திரு. **பொன்முடி சுப்பிரமணியன்** அவர்கள் ஆசி கமருதின் பள்ளித் தமிழ் மன்றத்தில் நடத்திய நிகழ்ச்சியும் மறப்பதற்கில்லை. அந் நிகழ்ச்சி நடத்தப் பெற்ற அரங்கமும் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். அந்நிகழ்ச்சிக்கு ஏராளமான தமிழ் ஆசிரியர்களும் பள்ளிமாணவ மாணவியர்களும்நகரப் பெருமக்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. மாணவ மாணவியர்கள் இறுதிவரை இந் நிகழ்ச்சியை இருந்து கேட்டனர்..

29-5-86- அன்று கோலக்கிள்ளானில் திருவள்ளுவர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தவர் நெடுநாளைய தென்மொழி அன்பரும் பாவலரும் எழுத்தாளரும் ஆகிய திரு. **முரசு. நெடுமாறன்** ஆவார். இந் நிகழ்ச்சியில் நம் மதிப்பிற்கும், அன்பிற்கும் உரியவரும், நம் கொள்கை இயக்கத்திற்கு மிகவும் துணை நிற்பவரும், நீண்ட நாளைய தென்மொழி அன்பரும் ஆகிய திரு. **இரா. ந. வீரப்பன்** கலந்துகொண்டு மேடையில் அமர்ந்திருந்தார்.

இந் நிகழ்ச்சியில் குறிப்பிடத்தகுந்த இன்னொரு செய்தியும் நடந்தது. பாவலரேறு அவர்கள் ‘இந்து மதம்’ தமிழர்களுக்கு உரியதன்று என்றும், தமிழர் தம்மை ‘இந்தியர்’ என்று அழைத்துக் கொள்ளக் கூடாதென்றும், இந்து மதம் தமிழர்களைக் கீழ்மைப் படுத்தி, ஆரியத்திற்கு அடிமைப் படுத்துவதென்றும், வரலாற்று அடிப்படையில் மிக விளக்கமாகவும், விரிவாகவும் பேசியதைக் கேட்டிருந்த ‘விசுவ இந்து பரிசத்’ என்னும் இயக்கத் தொடர்புடைய இளைஞர்கள் சிலர், இந் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த திரு. முரசு-நெடுமாறன் அவர்களை, இடையில் அழைத்துத் தம் மறுப்பைத் தெரிவித்ததுடன், தம் வெறுப்பையும் புலப்படுத்தும் வகையில், அரங்கத்திற்கு வெளியில், விற்பனையாகிக் கொண்டிருந்த பாவலரேறு அவர்களின் நூல்கள் சிலவற்றை வாங்கி, அவற்றைத் தீயிட்டுக் கொளுத்த முயற்சி செய்தனர். இதனால், தமிழ் நெறிக் கழக அன்பர்கள் பலரும் கொதிப்படைந்து, அம் முயற்சியை எதிர்கொள்ள அணியமாக இருந்தனர். பெரும் குழப்பமாக வளர விருந்த இந் நிகழ்ச்சி, பின்னர் கூட்ட அமைப்பாளர் சிலரால் தடுத்து நிறுத்தப்பெற்றது. பாவலரேறு அவர்களிடம் இச் செய்தி பின்னர் தெரிவிக்கப் பெற்ற பொழுது, ‘அவ்வாறு நடந்திருந்தால் விளைவு மிக நல்லதாக இருந்திருக்கும், என்று கூறி, அவ்வாறு நடவாமற் போனதற்கு வருத்தம் தெரிவித்தார்கள்.

(தொடரும்)

உ. த. மு. க. வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
- சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம் !
- இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல் !
- மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி !
- பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம் !
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை !

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள் :

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 73 TN. MS. (C) 657

அனுப்புதல் :
தமிழ்நிலம்
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
தொலைபேசி எண் : 847829.

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

பெறுநர்:
திரு. / திருவாட்டி
நூல் அஞ்சல்